# முன்னுரை

# முன்னுரை

## ஆய்வுப்பொருள்

நாட்டுப்புறவியல் ஆய்வு இன்று உலகளவில் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. தமிழ்நாட்டில் நாட்டுப்புறவியல் குறித்த ஆய்வுகள் பன்முக நோக்கோடு செய்யப்பட்டு வருகின்றன. ஒரு சமுதாயத்தின் வாழ்வையும் வரலாற்றையும் தெளிவாகக் காட்டுவது நாட்டுப்புறவியல். எனவேதான் நாட்டுப்புறவியலைச் சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பர். பழைய மரபுகள் நாட்டுப்புற மக்களிடையே பெரிதும் நிலைபெற்று அவை அவர்களிடம் வழங்கியும் வருகின்றன. அவை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களான கதை, கதைப்பாடல், பாடல்கள் போன்ற வாய்மொழி வழக்காறுகள் மூலம் எதிரொலிக்கின்றன. இதன் அடிப்படையில் தமிழ்நாட்டின் தென்பகுதியான கன்னியாகுமரிமாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம் மக்களிடம் வாய்மொழியாக வழங்கி வருகின்ற நாட்டுப்புறக்கதைகளை ஆய்வுப் பொருளாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## கதைகளின் முக்கியத்துவம்

உலகக்கதைகள் எண்ணிலடங்காதவை. வெவ்வேறு மொழிக்கும் சூழலுக்கும் பண்பாட்டிற்கும் ஏற்பக் கதைகள் உருவாகின்றன. மனிதன் தான் அனுபவித்த ஒன்றை அல்லது கற்பனை ஒன்றைப் பிறரோடு கருத்துப் பரிமாறும் முயற்சியே அவனைக் கதை சொல்ல வைக்கிறது. ஆதிமனிதனின் சாதனைகளான வெள்ளம் நிறைந்த ஆற்றைக் கடத்தல், கொடிய விலங்குகளை வேட்டையாடுதல், எதிரிகளை வெற்றி கொள்ளுதல், இயற்கை நிகழ்வுகளைச் சமாளித்து வாழப் பழகுதல் முதலானவையே கதை சொல்லலின் கருவாக அமைந்துள்ளன எனலாம்.

மிகவும் பிற்காலத்தில்தான் சமூகத்தில் நீதியைப் புகட்டக் கதைகள் சொல்லப்பட்டன. முதலில் சாதனைகளும் அனுபவங்களும் மட்டுமே கதைகளாயிருக்க வேண்டும். அரசர்குலத்தில் பிறந்தவர்களுக்கும் எதிர்கால ஆட்சியாளர்களாக வர இருப்பவர்களுக்கும் ஆட்சியின் நுணுக்கங்களைக் கற்பிக்கவும், வித்தைகளைக் கற்பிக்கவும் கதைகள் சொல்லப்பட்டிருகின்றன. பஞ்சதந்திரக்கதைகள் விக்கிரமாதித்தன் கதைகள் போன்றவை அத்தகையவை. கௌதம புத்தரின் முன்ற் பிறப்புப் பற்றி விளக்கவும் சமய நெறியைப் பரப்பவும் புத்த ஜாதகக் கதைகள் தோன்றின. பெண்களைப் போதைப் பொருளாகப் பயன்படுத்திய அரசனுக்கு அறிவுபுகட்ட ஆயிரத்து ஓர் இரவுகள் கதைகள் சொல்லப்பட்டன. இவ்வாறு பல்வேறு காரணங்களுக்காகக் கதைகள் சொல்லப்பட்டிருப்பதனை வரலாற்றில் காண்கிறோம்.

எத்தனையோ கருத்துப்பரிமாற்ற உத்திகள் தோன்றி வளர்ந்து, வரலாற்றில் நிலைத்து நின்று பின் பயன்பாட்டை இழந்து இறுதியாக மறைந்து போயிருக்கின்றன. ஆனால் கதைகள் மட்டும் தொடர்ந்து சொல்லப்பட்டு வருகின்றன. கதைகள் சொல்லும் சூழல்கள் மாறலாம்; சொல்லும் முறைகள் மாறலாம்; ஆனால் தொடர்ந்து கதைகள் சொல்லப்பட்டுக் கொண்டே வருகின்றன. இது சமூகத்தில் கதைகளின் அவசியத்தை உணர்த்துவதாக அமைகின்றது.

## ஆய்வு நோக்கம்

ஒவ்வொரு காலகட்டத்திலும் வாழும் மக்களின் விருப்பு வெறுப்புகளுக்குத்தக்கவாறும், தேவைக்கு ஏற்றவாறும் இலக்கிய வகைகள் தோன்றி வளர்ந்துள்ளதை இலக்கிய வரலாறு காட்டுகின்றது. மக்களின் விருப்பத்தன்மைக்கு ஏற்றவாறும் அவை அமைகின்றன. அவ்வாறு உருவாக்கப் பெற்ற இலக்கிய இனங்களில் ஒன்றாக நாட்டுப்புறக் கதைகள் விளங்குகின்றன.

கதை என்பது எப்பொழுதும் அனைவராலும் விரும்பப்படுவதாகும். நாட்டுப்புறக் கதைகள் மக்களின் வாழ்க்கையோடு மிக நெருங்கிய தொடர்புடையனவாக இருக்கின்றன. இவற்றின் மூலம் அப்பகுதியில் வாழும் மக்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் தெய்வவழிபாடு, புராண இதிகாசக் கருத்துகள், அம் மக்களின் கருத்துலகு பற்றிய எண்ணம், பண்பாட்டுச் செய்திகள், மொழிநிலை, மறைந்து கிடக்கும் வரலாற்றுச் செய்திகள், சமூக உறவுநிலை போன்றவற்றைக் கண்டறிய இயலும். ஆகையால் அத்தகைய நோக்கோடு கன்னியாகுமரி மாவட்ட நாட்டுப்புறக்கதைகள் – ஓர் ஆய்வு (அகஸ்தீஸ்வரம் தாலுகா) எனும் இத்தலைப்பு தேர்வு செய்யப்பட்டது.

## ஆய்வு எல்லை (Area of study)

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அகஸ்தீஸ்வரம் தாலுகா இவ்வாய்வின் களப்பரப்பாக அமைகிறது. அகஸ்தீஸ்வரத்தை மையமாக்கி களப்பணி ஊர்கள் தேர்வு செய்யப்பட்டன. அவ்வூர்களில் கதை சொல்லிகள் பற்றிய தரவுகளைத் திரட்டியபின்னர் அவர்களை அணுகிக் கதைகள் சேகரிக்கப்பட்டன. கதைகள் பெரும்பாலும் பல வயதுப் பிரிவினரிடமும் (age groups) காணப்பட்டது. ஆய்விலும் முதியோரிடம் கிடைத்த கதைகள் ஒரு அமைப்போடு அமைந்துள்ளமை உணரப்பட்டு அவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

## கள ஆய்வு முறைகள்

நாட்டுப்புறவியல் ஆய்வுகளில் தரவுகளைப் (Data) பெறுவதற்குக் களப்பணி இன்றியமையாததாகும். களப்பணி வாயிலாகவே முதன்மை ஆதாரங்களைத் (Primary source) திரட்ட முடியும். மானிடவியல், மொழியியல், பண்பாடு, சமுதாய அமைப்பு போன்றவற்றில் ஆய்வு மேற்கொள்ள அப்பகுதிக்குச்

சென்று அவர்களது பண்பாடு, சமுதாய அமைப்பு மொழி போன்றவற்றின் தரவுகளைத் திரட்டக் களப்பணி இன்றியமையாததாகும்.

முதன் முதலில் முறையான களப்பணிக்கு வித்திட்ட மானிடவியலறிஞர் மாலினோவ்ஸ்கி "ஒரு சமுதாயத்தின் ஒவ்வொரு செயலையும் நேரில் சென்று உற்று நோக்கிக் கருத்துக்களைக் கேட்டறியும் போதுதான் அச்செயலைப் பற்றியும் அதன் வழிமுறைகளையும், அவை என்னென்ன என்பதையும் அறிய முடியும் என்கிறார்"[1].

ஆய்விற்குத் தேவையான கதைகளைத் திரட்டுவதற்கு "நாட்டார் வழக்காற்றியல் கள ஆய்வு"[2], A Guide for field workers in Folklore[3], Foundation of social Research[4] எனும் நூல்களும் துணையாக அமைந்தன. அடுத்து கள ஆய்வு முறையில் தகவலாளர்களைத் தேர்வு செய்தல் என்பது முக்கியமான பணியாகும். கதைகளைச் சேகரிப்பதற்குத் தகவலாளர்கள் சாதி பொருளாதார அடிப்படையில் தேர்வு செய்யப்படவில்லை. மேலும் சிறுவர் சிறுமியர்களும் தகவலாளர்களாகக் கொள்ளப்படவில்லை. படிப்பறிவு இல்லாத – படிப்பறிவு உடைய ஆடவரும், மகளிரும் தகவலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## தகவல் திரட்டிய முறை

இவ்வாய்விற்குத் தேவையான தரவுகள், கள ஆய்வு செய்து தொகுக்கப்பட்டன. தொகுக்கப்பட்ட கதைகளில் ஒரு சில கதைகள் இயற்கைச் சூழலிலும் ஏனைய கதைகள் தூண்டப்பட்ட சூழலிலும் சேகரிக்கப்பட்டன. அனைத்துக்கதைகளும் ஒலிப்பதிவு செய்து ஆய்வாளரால் படியெடுக்கப்பட்டன. தகவலாளிகளிடம் பேட்டி கண்டு கதைகளைக் குறித்த செய்திகளும், வழங்கும் சூழல்களும் அறிந்து கொள்ளப்பட்டன.

G 33938

## கள ஆய்வு அனுபவங்களும் சிக்கல்களும்

நாட்டார் வழக்காற்றியலில் களப்பணி வாயிலாகத் தரவுகளைச் சேகரிப்பதென்பது சிக்கல் நிறைந்ததொன்றாகும். அவ்வகையில் இவ்வாய்விற்கான தரவுகளைச் சேகரிக்கும் பொழுது சில சிக்கல்கள் ஏற்பட்டன. தரவுகள் சேகரிக்கச் செல்லுகையில் மனமுவந்து கதை தெரியுமென்று யாரும் சொல்லவில்லை. பலமுறை சென்று அவர்களிடம் பழகிய பின்னரே கதை சொல்ல முன்வந்தனர். சில வயதான பெண்களிடம் கதை கேட்டுக் கொண்டிருக்கும் போது இடையில் நிறுத்திவிட்டுச் சொல்லுகிறேன் என்று சில கதைகளைத் தேவையில்லாத இடங்களில் நிறுத்தினர். இதனால் கதை கேட்டுக்கொண்டிருக்கும் போது திரும்பக் கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆய்வாளர் அப்பகுதியைச் சேர்ந்தவர் என்பதால் மொழிநடையினைப் புரிந்து கொள்ளுவதில் சிக்கல் ஏதும் ஏற்படவில்லை. கள ஆய்வு மேற்கொண்ட பகுதி விவசாயம் மற்றும் தொழில் தொடர்பானது என்பதால் பகல் நேரங்களில் தகவலாளர்களிடம் தரவுகளைச் சேகரிப்பதில் தடங்கல் ஏற்பட்டது. அதனால் மாலையிலும் இரவிலும் மட்டுமே தகவலாளர்களைச் சந்தித்துத் தரவுகளைத் திரட்ட முடிந்தது. ஓரிரு நாட்களில் இரவு பத்து மணி வரையிலும் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

சில பெண்கள் தங்களுடைய பெயர் வெளிவந்துவிடும் என்று பயந்து கதை சொல்ல முன்வரவில்லை. சில தகவலாளிகள் தமக்குக் கதைகள் தெரியும் என்றும் ஆனால் கதைகளைச் சொல்லும் போது தவறுகள் ஏதாவது நிகழ்ந்துவிடுமோ என்று பயமாயுள்ளது என்றும் கூறினர். சில கதைகள் சேகரிக்கும் போது கதை சொல்பவர் இடையில் உள்ளவர்களிடம் பேசுவதும் உண்டு. அவ்வேளையில் தடங்கல் ஏற்படுவதும் உண்டு.

நாட்டார் வழக்காறுகளை இயற்கைச் சூழலில் தொகுப்பது சிறப்புடையது. இவ்வட்டாரத்தில் ஒரு சில கிராமத்தில் சிறு தொழிலான

புளிகுத்துதல், பீடி சுற்றுதல் போன்ற வேலைகளை நள்ளிரவுவரை பல பெண்கள் சேர்ந்து செய்வதுண்டு, அவ்வேளையில் வேலைப்பளு இல்லாமல் இருக்கவும் தூக்கத்தைப் போக்கவும் நாட்டார்கதைகள், பாடல்கள், விடுகதைகள், பழமொழிகள் போன்ற வழக்காறுகளை அவர்கள் கூறுவதுண்டு. இவ்வேலைகள் பெரும்பாலும் வீட்டு முற்றத்தில் நடைபெறும். அப்போது கதைகள் சேகரிக்கப்பட்டன.

இவ்வட்டாரத்தில் சில கிராமங்களில் கதைகள் சொல்லும் வழக்கம் அரிதாகிக் கொண்டே வருகின்றது. அதனால் தூண்டப்பட்ட சூழலிலேயே பெரும்பான்மையான கதைகள் தொகுக்கப்பட்டன.

சில தகவலாளிகள் முதலில் தரவுகள் தர மறுத்தனர். அப்போது முன்பு பதிவு செய்து வைக்கப்பட்ட ஓரிரு கதைகளை ஒலிப்பேழையில் இட்டுக் காண்பித்தவுடன் அவர்கள் கதைச் சொல்லச் சம்மதித்தனர். தகவலாளிகள் கூறிய எல்லாக் கதைகளும் ஒலிப்பதிவு செய்யப்பட்டன.

## ஆய்வு மூலங்கள் (sources)

இவ்வாய்விற்கு முதன்மை ஆதாரங்களாக அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் சேகரிக்கப்பட்ட கதைகளும், துணை ஆதாரங்களாக பிராப்பின் Morphology of Folktales என்ற நூலும் ஆலன்டண்டிஸின் நாட்டுப்புறவியல் தொடர்பான கட்டுரைகளும் (Essays in Folkloristics) டார்சனின் நாட்டுபுறவியலும் வாழ்வும் (Folklore and Folklife) என்ற நூலும் இவற்றுடன் தமிழ் நாட்டுப்புறவியல் தொடர்பாக வெளிவந்த நூல்களும், கட்டுரைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இவ்வாய்விற்கு வழிகாட்டியான பேராசிரியர் டாக்டர். பீ.டாக்டர் நசீம்தீன் அவர்கள் தென்னிந்திய மொழிகளினுடைய நாட்டுப்புறவியல் கழகத்தின் Folklore Of Society of South Indian Languages (FOSSILS) மூலம் நாட்டுப்புறவியல்

தொடர்பான பணிமனை நடத்திய அறிவும் பகிர்ந்து கொள்ளப்பட்டது. இதுவும் பிறமொழிக்கதைகள் பற்றி அறிந்து கொள்ள ஓரளவிற்கு உதவியாக இருந்தது.

## ஆய்வு அணுகுமுறைகள்

சேகரிக்கப்பட்ட கதைகள் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டு விளங்குவதால் அதனை ஒரு குறிப்பிட்ட ஆய்வு முறையை மட்டும் பயன்படுத்தித் தெளிவாகவும் முழுமையாகவும் விளக்க இயலாது. எனவே இவ்வாய்வில் விளக்கமுறை ஆய்வு, கோட்பாட்டு ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## நாட்டுப்புறக்கதை ஆய்வு முன்னோடிகள்

நாட்டார் வழக்காற்றியலில் அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் ஆர்வம் காட்டியதன் விளைவாக ஆலன்ட்ண்டிஸ், பிரண்டா பெக் போன்ற ஆய்வாளர்கள் தமிழகக் கதைகளை வெவ்வேறு கோணங்களில் ஆய்ந்துள்ளனர். ஆன்ட்டி ஆர்னே என்பவர் 1910–இல் கதைகளின் கூறுகளை அடைவு செய்து நூலாக வெளியிட்டவர். 1928–இல் உருஷ்ய அறிஞர் விளாடிமர் பிராப், ஆர்னே, தாம்ஸனின் ஆய்வுமுறை அடிப்படையில் புதிய அமைப்பை ஏற்படுத்தினார். பிராப்பின் அமைப்பியல் நூலினை அடிப்படையாகக் கொண்டு ஆலன் டண்டிஸ் வட அமெரிக்கக் கதைகளை ஆராய்ந்தார்.

தமிழில் மேலை நாட்டினரின் ஆய்வை அடிப்படையாகக் கொண்டே பல ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இதில் நாட்டார் கதைகள் பற்றிய ஆய்வுகள் பொது ஆய்வாகவும், அமைப்பியல் ஆய்வாகவும் செய்யப்பட்டுள்ளன.

பொது ஆய்வாக, அ.ம. சத்தியமூர்த்தி, தமிழக நாட்டுப்புறக் கதைகள்–ஓர் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம்; சோம சுந்தரம், தஞ்சை மாவட்ட நாட்டுப்புறக்கதைகள்–ஓர் ஆய்வு, சென்னைப் பல்கலைக் கழகம்;

வீ. அய்யனார், மதுரை மாவட்ட நாட்டுப்புறக் கதைகள்—ஓர் ஆய்வு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்; ஜே. ரோஸ்லெட்டானிபாய், குமரிமாவட்ட நாட்டுப்புறக்கதைகள் (கல்குளம் வட்டாரம்)—ஓர் ஆய்வு, கேரளப் பல்கலைக்கழகம்; ஆகியன குறிப்பிடத்தக்கன.

அமைப்பியல் ஆய்வு ஞா. ஸ்டீபன், “வேடிக்கைக் கதைகளில் அமைப்பியல் ஆய்வு விளவன்கோடு வட்டம்”, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்; தர்மராஜ், “நெல்லை கட்டபொம்மன்—தூத்துக்குடி சிதம்பரனார் மாவட்ட நாட்டுப்புறக்கதைகள்—அமைப்பியல் ஆய்வு”, ஜவஹர்லால் பல்கலைக் கழகம், ஆகியன அமைப்பியலாய்வுகளில் குறிப்பிடத்தக்கன.

## ஆய்வுப் பகுப்பு

இவ்வாய்வு, முன்னுரை முடிவுரை நீங்கலாக ஐந்து இயல்களாகப் பகுத்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

1. நாட்டுப்புறக்கதைகள் தோற்றமும் வளர்ச்சியும்
2. நாட்டுப்புறக்கதைகள் விளக்கமும் வரையறையும்
3. கதைகளில் வாழ்வியல் கூறுகளும் பாத்திரங்களும்
4. அமைப்பியல் ஆய்வில் கதைகள்
5. மொழிநடை

இறுதியாக பின்னிணைப்பில் தகவலாளர் பட்டியல், சேகரிக்கப்பட்ட நாட்டுப்புறக்கதைகள் இடம்பெற்றுள்ளன.

## அடிக்குறிப்புகள்


1 B. Malinovski, "Social Anthropology in Encyclopedia of Britanica, 14th Ed. Vol-20. pp.862).

2 தே. லூர்து. நாட்டார் வழக்காற்றியல் கள ஆய்வு, பாரிவேள் பதிப்பகம், பாளையங்கோட்டை.

3 Kenneth S. Goldstein - A guide for field worker in Folklore Associates, Pensylvania, 1964.

4 Nan, Lin, Foundation of social research, Mc. Graw Hill Company, New York, 1976.